# செயற்றிட்ட பணியாட் தொகுதியினரை ஆட்சேர்த்தல்

## தொலைக்காட்சி ஒளிபரப்பை டிஜிட்டல்மயப்படுத்தும் செயற்றிட்டம்

## சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

JICA நிறுவனத்தினால் நிதியளிக்கப்படும் தொலைக்காட்சி ஒளிபரப்பை டிஜிட்டல்மயப்படுத்தும் (DTTB) செயற்றிட்டத்தின் பின்வரும் பதவிகளுக்காக ''ஒப்பந்த அடிப்படை''யில் செயற்றிட்ட பணியாளர்களை ஆட்சேர்ப்பதற்காக அரச / தனியார் பிரிவின் தகுதி வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சகல ஆட்சேர்ப்புகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் (DMS) சுற்றுநிருப இலக்கம் 01/2026 மற்றும் அரசாங்க ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். மேற்கூறிய சுற்றுநிருபத்தின் 02ஆம் அட்டவணையில் ஒவ்வொரு பதவிகளுக்குமான சம்பளம் குறிப்பிடப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர் 54 வயதிற்குக் குறைவானவராக இருக்க வேண்டும். ஆங்கில மொழியில் தேர்ச்சி, அரச சட்ட திட்டங்கள் தொடர்பான புரிந்துணர்வு மற்றும் கணனி சொல்லாக்கம் அவசியமான முன் தகைமைகளாகும். இலங்கையில் வெளிநாட்டு நிதியளிப்பு திட்டங்களில் சேவையாற்றியுள்ள சேவை அனுபவம் மேலதிக தகைமையாகும்.

| தொ. இல. | சம்பள நிலை/ தொகுதி | பதவி | பதவிகளின் எண்ணிக்கை | தொடர்புடைய சுற்றுநிருபம் |
|---|---|---|---|---|
| 01 | Category C | உதவி செயற்றிட்டப் பணிப்பாளர் (இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல்) | 01 | முகாமைத்துவ சேவை திணைக்கள சுற்றுநிருபம் 1/2026 |
| 02 | Category C | உதவி செயற்றிட்டப் பணிப்பாளர் (சிவில் பொறியியல்) | 01 | |
| 03 | Category C | உதவி செயற்றிட்டப் பணிப்பாளர் (பெறுகை) | 01 | |
| 04 | Category F | தொழில்நுட்ப அதிகாரி (இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல்) | 02 | |

2026-01-02ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் இந்தப் பதவிகளுக்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

ஒவ்வொரு பதவிகளுக்குமான மேலதிக தகவல்களை www.dttb.gov.lk இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கூறிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் தமது சுய விபரங்களுடனான விண்ணப்பத்தை முகப்புக் கடிதம், தகைமை மற்றும் அனுபவம் என்பவற்றை உறுதி செய்யும் ஆவணங்களுடன் 2026 மார்ச் 6ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். மேற்கூறிய ஆவணங்களின் மென் பிரதியொன்றை pddttb@media.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**தொலைக்காட்சி ஒளிபரப்பை டிஜிட்டல்மயமாக்கும் செயற்றிட்டம்,**
**315-ஏ, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு 07.**

தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர். எந்தவொரு விதத்திலும் அழுத்தம் பிரயோகித்தல் தகுதியீனமாகும் என்பதுடன் அவ்வாறான விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்,**
**சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.**